# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET**

Case No. **SC.No. 4/2025**
Prosecution: **PW- 5**

**Deposition of the witness of LW- 9**

| | | | |
|---|---|---|---|
| **Name** | Dr. Vennila | **District** | இராணிப்பேட்டை |
| **Husband's Name** | Prakash | **Calling** | முதல்நிலை உதவி மருத்துவர், சுமைதாங்கி அரசு அரசு ஆரம்ப சுகாதார மையம் |
| **Age** | 49/2026 | **Religion** | --- |
| **Village/Town** | சுமைதாங்கி | **Caste** | --- |
| **Taluk** | வாலாஜா | **ID Card No.** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of May 2026.

எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:–</u>**

1. நான் தற்போது சுமைதாங்கி அரசு ஆரம்ப சுகாதார மையத்தில் முதல்நிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் ஆற்காடு அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வந்தேன்.

2. கடந்த 21.04.2013 ஆம் தேதி இரவு 11.20 மணியளவில் ஆற்காடு அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது சிவசந்திரன் த/பெ மருதமுத்து என்பவரை இரவி, முதல்நிலை காவலர் எண்.114 என்பவரால் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார்.

3. அப்போது முதல்நிலை காவலர் ரவி 21.04.2013 ஆம் தேதி மாலை 03.30 மணிமுதல் 06.30 மணிக்குள்ளாக தங்ககோவில் முன்பு 4 பெயர் தெரியாத நபர்கள் பெயர் தெரியாத ஆயுதங்களால் சிவசந்திரன் என்பவரை தாக்கியதாக சொன்னார்.

4. சிவச்சந்திரன் சிகிச்சைக்கு வரும் சமயத்தில் மதுபோதையில் இருந்தார். அவருக்கு கழுத்தின் முன் பகுதியில் 15 x 1, 14 x 1, 16 x 1 cm அளவிலான கிழிந்த காயம் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கினேன். சிவச்சந்திரனின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.த.சா.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. சிவச்சந்திரனின் கழுத்தின் முழுமையான அளவு என்னவென்றால் தெரியாது. நான் அ.த.சா.5ல் குறிப்பிட்டுள்ள சிவச்சந்திரனின் கழுத்தின் முன் பகுதியில் ஏற்பட்டிருந்த மூன்று அளவிலான கிழிந்த காயங்கள் எந்த வரிசையில் காணப்பட்டது என்றால் ஒன்றன்கீழ் ஒன்றாக கழுத்தில் காணப்பட்டது.

2. பொதுவாக ஒருநபரின் கழுத்தில் கயிறு போன்று ஆயுதத்தால் இறுக்கும் சமயங்களில் கழுத்து சுற்றி முழுமையாக காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

3. சிவச்சந்திரன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்ட சமயத்தில் அவர் முழுமையான போதை நிலையில் இருந்ததால் தான் சம்பவம் பற்றி அவர் என்னிடம் கூற இயலாத நிலையில் அவரை

அழைத்துவந்த முதல் நிலை காவலர் சம்பவம் பற்றி என்னிடம் தெரிவித்தார் என்றால் சரிதான்.

4. முதல்நிலை காவலர் ரவி சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒருநபருக்கு கழுத்தின் முழு சுற்றளவு 30 செ.மீட்டருக்கு மேல் தான் இருக்கும் என்றால் சரிதான்.

5. ஒருநபர் முழுபோதையில் இருக்கும் சமயத்தில் கட்டப்பட்டிருக்கு ஒரு கயிற்றின் மீது தவறி விழும்போது, மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** - இல்லை

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/- A.Daoudh Ammal
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate, Ranipet.